<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.பொள்ளாச்சி</u>

நாள்: 07.02.2025 அ.வ.எண்.27/2023 வா.சா.1 ரங்கநாயகி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) நான் என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது கணவரின் வாரிசு சான்று இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2) எனது கணவரின் தாயார் எப்போது இறந்தார் என்று குறிப்பிட்டு வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3) எனது கணவரின் தாயார் இறந்ததாக சொல்வது குறித்து ஆவணமும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4) எனக்கும், முருகானந்தத்திற்கும் எப்போது எங்கு, எந்த முறைப்படி திருமணம் நடைபெற்றது என்ற தகவலை வழக்குரையில் சொல்வில்லை என்றும், திருமணம் நடைபெற்றது குறித்த ஆவணமும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5) இறந்துபோன முருகானந்தத்திற்கு நாங்கள்தான் வாரிசுகள் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. போதுமான சங்கதிகளை வழக்குரையில் கூறாமலும் ஆவணங்களை தாக்கல் செய்யாமலும், தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.